## லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்– 2017

லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்டக் கூற்றுக்கள் மற்றும் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 யூன் 28 இல் நடாத்தப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் KPMG இனை கம்பனி நியமித்ததிலிருந்து, லங்கா ஹொஸ்பிடல் டயக்நோஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் கம்பனியின் கணக்காய்வு அபிப்பிராயம் KPMG (பட்டயக் கணக்காளர்) தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டது. 2018 மார்ச் 28 இல் KPMG தெளிவானதொரு அபிப்பிராயத்தை வழங்கியிருந்தது.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களிடமிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாதிரியில், நேரடியான உறுதிப்படுத்தல் காணப்படாமை காரணமாக கணக்காய்வில் முறையே ரூபா 10,236,012 மற்றும் ரூபா 12,793,744 தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களின் துல்லியத்தன்மை மற்றும் உள்ளதன்மையினை அறுதியிடமுடியாதிருந்தது.

#### 2.2.2 இணக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

பெறப்பட்ட உறுதிப்படுத்தல்களுடன் ஒப்பிடும் பொழுது, பொதுப் பேரேட்டில் காட்டப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுக்கிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறு.

| கடன்கொடுத்தோர் பெயர் | பேரேட்டின் பிரகாரம் தொகை | உறுதிப்படுத்தலின் பிரகாரம் தொகை | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| ஈமார் பார்மா (பிறைவேட்) லிமிட்டட் | 3,303,730 | 2,793,635 | 510,095 |
| J.L மொரிசன் & சன்ஸ் லிமிட்டட் | 21,408,782 | 21,585,601 | 176,819 |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்கொடுத்தோர் வயதுப் பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,165,664 தொகையான முற்பண செலுத்துகைகள் கடன்கொடுத்தோர் மீதிகளாக இனங்காணப்பட்டிருந்தது.

### 2.4 செயற்பாடற்ற கணக்குகள்

ரூபா 259,872 தொகையான பெறப்பட்ட முற்பணம் மற்றும் செலுத்தவேண்டிய பரீட்சிப்பு கட்டணங்களின் மொத்த மீதியொன்று கணக்குகளில் நீண்டகாலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக மாற்றப்பட்டிராது தொடர்ந்தும் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டில்கூட அந்த மீதிகளினைத் தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் ரூபா 265,688,811 வரிக்கு முன்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில், ரூபா 208,768,600 வரிக்கு முன்னரான இலாபத்தினை விளைவித்திருந்தமையால், ரூபா 56,920,211 இனால் குறைவடைந்த வரிக்கு முன்னரான இலாபத்தினை சுட்டிக்காட்டுகின்றது. பிரதானமாக கம்பனியின் மந்தமான செயலாற்றல் காரணமாக, ஆண்டின் போது 21.4 சதவீதமான வரிக்கு முன்னரான இலாபம் குறைவடைந்து காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

**நிதிசார் விளைவுகளின் பொழிப்பு**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகளின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

**திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு**

| | 2017<br>'000<br>கம்பனி<br>ரூபா | 2016<br>'000<br>கம்பனி<br>ரூபா |
|---|---|---|
| வருமானம் | 1,156,505 | 984,358 |
| சேவைக் கிரயம் | (582,489) | (418,234) |
| மொத்த இலாபம் | 574,015 | 566,124 |
| ஏனைய வருமானம் | 52,500 | 15,000 |
| நிர்வாகச் செலவினங்கள் | (312,784) | (266,247) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | (103,442) | (59,709) |
| நிதி வருமானம் | 50,927 | 25,506 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 208,769 | 265,689 |
| வருமான வரிச் செலவினம் | (36,897) | (16,057) |
| ஆண்டிற்கான இலாபம் | 171,872 | 249,631 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயற்பாடும் மீளாய்வும்

நடைமுறையொன்றாக, வைத்தியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஆய்வுகூட பரீட்சிப்புக்களுக்கு காலாவதியான மருந்துகளினை கம்பனி பயன்படுத்துகின்றது.

காலாவதியான இருப்பு வகைகள், தொழில்நுட்ப சரிபார்த்தலொன்றின் பின்னர் பயன்படுத்த முடியுமெனவும் அது தொழிற்துறை நடைமுறையொன்றாகக் காணப்படுகின்றதெனவும், காலாதியாயிருந்த வகைகளினை பயன்படுத்துகின்ற பொழுது பின்பற்றுவதற்கு திடமானதொரு நியம செயற்பாட்டு நடைமுறைகளொன்றை (எஸ்ஓபி), அவர்கள் கொண்டுள்ளனர் என தலைவர் அறிவித்திருந்தார்.

மேலும், 2015 திசெம்பர் 31 இல் இருந்து நிதிக்கூற்றுக்களில் ரூபா 773,122 ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.